RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s2140

OPEN ACCESS

# தமிழர் பண்பாட்டு விழுமியங்கள்

**சு. சுதா** [அ, *]

[அ] தமிழாய்வுத் துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), கரூர்-639006, தமிழ்நாடு, இந்தியா.

# Cultural Values of Tamil people

**S. Sudha** [a, *]

[a] Research Department of Tamil, Kongu College of Arts and Science (affiliated to bharathidasan university), Karur-639006, Tamil Nadu, India

* Corresponding Author: srinimalansudha@gmail.com

Received: 08-09-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

**ABSTRACT**

Sangam literature is a symbol of Tamil culture. The people of the Sangam period demonstrated individual morality and done best activities in society by following certain codes in life. Culture is materially defined by the nature of an individual and the activities of the society to which he belongs. In this article the internal, external and social life of Tamil people are explained. Tamil culture always has a unique place in human history. Although Tamil people lives under such two major divisions, they gave more importance to internal life. Culture is the way of life in the society, traditions, customs, social relations, scientific development, art and so on. On the basis of the culture both the association of the individual with the society and the perception of the society to the individual takes place. The purpose of this research paper is to explore the cultural values that are followed by Tamil people in the society.

**Keywords:** Tamil People, Tamil Culture, Sangam Literature, Society

## முன்னுரை

தமிழர் பண்பாட்டின் அடையாளமாக சங்க இலக்கிய நூல்கள் விளங்குகின்றன. வாழ்க்கை நெறியை கடைப்பிடித்து தனிமனித ஒழுக்கத்தையும், சமுதாயத்தின் மிகச்சிறந்த செயல்பாடுகளையும் சங்க கால மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். பண்பாடு என்பது தனிமனிதனின் சிறப்பு இயல்புகளிலும், அவன் சார்ந்த சமுதாயத்தின் செயல்பாடுகளாலும் பொருள் விளக்கம் செய்யப்படுகிறது. இவற்றில் பண்டைய தமிழ் மக்களின் அகவாழ்க்கை, புறவாழ்க்கை பற்றியும், சமூக பண்பாடு பற்றியும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை சங்க கால மக்களின் பண்பட்ட வாழ்க்கையை அறிய உதவுகின்றன. அதனை எடுத்துரைக்க தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் என்னும் பொருளில் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

## தனிமனிதனும் சமூகமும்

மனிதன் இயல்பாகவே சமூகத்தில் வாழும் ஆர்வமுள்ளவன். இதனாலேயே அவன் சமூக விலங்கினெப்படுகிறான். தனிமனிதனின் சிந்தனையும் பழக்க வழக்கங்களும் சமூகத்தாலேயே அளிக்கப்படுகின்றன. தனி மனிதன் சமூகத்தின் விதிகட்குட்பட்டு அதன் வளர்ச்சிக்கும் வாழ்வுற்கும் பாடுபடவேண்டுமெனச் சான்றோர் எதிர்பார்க்கின்றனர். தனி மனிதனின் வாழ்வு அவன் வாழும்

சமூகத்தைப் பொறுத்தே இன்பமயமானதாகவோ, துன்பமயமானதாகவோ அமையக்கூடியது என்ற உண்மையையும் சங்க கால மக்கள் உணர்ந்திருந்தனர். இரப்போர்க்கு கொடாது வைத்திருக்கும் செல்வம் பயனின்றி அறியத்தக்கது என்பது சங்க காலக் கொள்கையாகும்.

"இரந்தோர்கீயாது ஈட்டியோன் பொருள்போல்

பரந்து வெளிப்படாதாகி

வருந்துகி தில்யாய் ஓம்பிய நலனே"

தம்மை நம்பியும் நயந்தும் வந்தவர்களின் வறுமையைப் போக்க இயலாமை இழிவைத் தரும் என்பது அக்காலக் கொள்கையாகும் (Puliyur Kesigan, 1997). பொருட்செல்வத்தின் சிறப்பையும் அதன் பயனையும் சங்ககாலச் சான்றோர் நன்குணர்ந்து போற்றினர்.

எனினும் அருட் செல்வமில்லாதபோது பொருட்செல்வத்திற்கு யாதொரு பயனும் இல்லை என்பதனை,

"நெடிய மொழிதலும் கடியவூர்தலும்

செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே

சான்றோர் செல்வமென்பது சேர்ந்தோர்

புன்கண் ணஞ்சும் பண்பின்

மென்கட் செல்வம் செல்வமென்பதுவே"

இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் உலக வாழ்க்கையில் அவற்றை பகிர்ந்து கொள்ளும் உரிமையும் கடமையும் உடையவர் உறவினரும் நண்பருமாவர். உறவோடும் நட்போடும் வாழ்வதில் உள்ள இன்பத்தினை சங்க இலக்கியம் பெரிதும் போற்றியுள்ளது (Narayanasamy, 1942).

"அன்பெனப்படுவது தன் கிளை செறா அமை"

என்று கலித்தொகை கூறுகிறது (Viswanathan, 2004).. தன் சுற்றத்தினர் மனம் வருந்துமாறு ஒருவன்பால் கெழுவுற்ற செல்வம் தான் அழிவதோடு தன்னைப் பெற்றவன் குடியையும் அழிக்கும். சமூகத்தின் ஓர் உறுப்பாக அமையும் மனிதன் ஒருவன் வறியவர், நண்பர், உறவினர், விருந்தினர் ஆகியோருக்கு தன்னாலான உதவிகளை செய்து பயனுள்ள வாழ்க்கை வாழ வேண்டும் என்பது பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் குறிக்கோளாக விளங்குகிறது.

தனிமனித ஒழுகலாற்றைக் கூர்ந்து நோக்கும் சமூகம் அவன் செயல்களில் நல்லன கண்டு ஏற்றுக் கொண்டு தீமையிதனைக் கண்டு எதிர்ப்பு தெரிவிக்கிறது. சங்க கால தமிழர்கள் நாணத்தக்க செயல்களாக பலவற்றைக் கருதுகின்றனர். அவற்றுள் கோழைத்தனம் ஒன்றாகும். பெற்றோர்கள் பல பொருத்தங்களை ஆய்ந்து தம் பிள்ளைகட்குத் திருமணம் செய்து வைக்கும் வழக்கானது உறுதி பட்டிருந்த நிலையில் திருமணத்திற்கு முன்பே ஓராணும் பெண்ணும் கூடி உறவாடுவது சமூதாயத்தின் நடைமுறைக்கு புறம்பானது என்று கருதப்பட்டது.

## ஆண் பெண் உறவு

சங்கப் புலவர்கள் பாடிய செய்யுட்களில் பெரும்பான்மை ஆண் பெண் உறவு பற்றியனவாகும். இச்சான்றோர் ஆண் பெண் உறவின் சமூகக் கூறுகளையும், காதலர்தம் உளவியல் கூறுகளையும் நன்குணர்ந்து பாடியுள்ளனர்.

"காதலன்பது உடற்பசி, உள்ளப்பசி, உயிர்பசி, பிறவிப்பசி"

என்கிறார் (Manickam, 2005).

ஆண் பெண் உறவு என்பது காதலன் காதலி, கணவன் மனைவி, தலைவனும் பரத்தையும், என்ற மூன்று பிரிவுகளில் அக்காலச் சமுதாய அமைப்பு கூறுகிறது. எத்துணைப் பெருஞ்செல்வம் தனக்குக்

கிட்டுவதாயிருந்தாலும், தன் மனையாளை பிரிந்து சென்று அதனைப் பெற விரும்பாது புறக்கணிக்கும் உள்ளமுடையவனாக கணவன் படைக்கப்பட்டுள்ளான்.

"முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்

வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய

வாரேன் வாழிய நெஞ்சே"

போர் மேற்சென்ற தலைவன், வினை முற்றிய நிலையில் குறித்த பருவம் வந்தும் தான் வராத போது மனைவி படும் துயரங்களை எல்லாம் எண்ணியும், அவளுடைய காதல் நெஞ்சினை பற்றியும் இலக்கியங்கள் காட்டுகின்றன. தலைவியை நோக்கி விரையத் துடிக்கும் காதலன் மனநிலைக்கு ஈரச்செவ்வி மாறுமுன்னர் தன் சிறிய நிலத்தினை உழத்துடிக்கும் ஓரேர் உழவன் மனநிலை உவமையாக்கப்பட்டுள்ளது. தன் மனையாளின் கற்பு, விருந்தோம்பும் குணம் ஆகிய பண்புகளைப் பாராட்டுபவனாகக் கணவன் விளங்குகின்றான். கணவன் சொல்லில் நம்பிக்கை வைத்தல், வறுமையிற்செம்மை, துன்பத்தில் பங்கேற்றல், விருந்தோம்பற் பொருட்டு ஊடலை மறைத்தல் முதலான பண்புகள் கற்புடைமையின் கூறுகளாகவும், ஆண் பெண் உறவில் பெரிதாக மதிக்கப்பட்டுள்ளது (Nagarasan, 2007).

## மன்னனும் மக்களும்

சமூகத்தின் தலைவனாக மன்னனையே சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம் என்பது மன்னனின் தலைமையின்றி சமுதாயம் சிறப்பாக இயங்க முடியாது எனக் கண்டு கொண்டதன் விளைவாக தோன்றிய கூற்றாகும்.

மன்னனுக்கும் மக்கட்குமுள்ள உறவை தந்தை தாயர்க்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவாகக் கூறுவதுண்டு. அரசனை இழந்த நாடு துன்பப்படுவதைப் போல தாயை இழந்த குழந்தை துன்பப்படுகிறது என உவமையாகக் கூறும் நிலை காணப்படுகிறது.

திருவள்ளுவரும் தம் இறைமாட்சி அதிகாரத்தின் முதற்குறளில் "முறை செய்து காப்பாற்றும் மன்னவன்" எனக் காத்தல் தொழிலுக்கு முதன்மை அளித்தார். இடைக்காலத்து அரசியலறிஞரும் புலவருமான சேக்கிழார்,

“மாநிலம்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத்

தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்

ஊனமிகு படைத்திறத்தால் கள்வரால் உயிர்கள் தம்மால்

ஆனபயம் ஐந்தும்தீர்த் தறங்காப்பான் அல்லனோ"

என மன்னனை காவலனாகவே சித்தரித்துள்ளனர் (Ramasubramaniam, 2005).

மன்னனை நன்னெறிக்கண் செலுத்தும் சுற்றமிருத்தமை அறியப்படுகிறது. இவர்களின் கடமையைப் பற்றி மாங்குடி மருதனார்,

"நன்றும் தீதும் கண்டாய்ந் தடக்கி

அன்பும் அறனும் ஒழியாது காத்துப்

பழியொரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த

செம்மை சான்ற காவிதி மாக்களும்"

மன்னனின் சுற்றத்தின் சிறப்புகளும், அவனை நல்வழியில் செல்வதற்கு உறுதுணை புரிந்த சான்றோர்களும் மக்களுக்கும் மன்னனுக்கும் மிகச் சிறந்த அறிவுரைகளை வழங்கினார். மக்கள் நிலத்தில் முழு உரிமை உடையவர்களாகவும், வாணிகம் உழவு போன்ற துறைகளையும் நன்று

போற்றி வளர்த்தனர். மன்னன் ஆற்றலையும், செயலையும் கடவுளர் ஆற்றலோடும் செயலோடும் ஒப்பிடும் நிலை இருந்தது. எனினும் மன்னனைக் கடவுளாக கருதும் நிலை இல்லை (Ramamurthy, 2013).

## அறிவியல் சிந்தனை

சங்க கால மக்கள் பல்துறைப்பட்ட அறிவியல் சிந்தனைகளை கொண்டிருந்தனர். வானியலிலும் அதன் அடிப்படையில் தோன்றிய சோதிடத்திலும் வல்லவராய் இருந்தனர். அத்தகையோர் அறிவர் என்றும் கணியன் என்றும் அழைக்கப்பட்டனர். கணியன் பூங்குன்றனார், பக்குடுக்கை நன்கணியார் போன்ற புலவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

வானியலறிவு கொண்டு நாள்மீன், கோள்மீன் என்று வகுத்து அதன் அடிப்படையில் அசுவினி, பரணி என்று சொல்லப்படும் 27 நட்சத்திரங்களும் அதன் சிறப்புகளும் கூறப்படுகின்றன. கோள்களின் நிறம், வடிவம் கொண்டு வெள்ளி, செவ்வாய் என குறிக்கப்பட்டு சங்க கால மக்கள் அறிவியல் தன்மைகளை அறிந்திருந்தனர்.

வெள்ளிமழைக் கோளாக கருதப்பட்டு, வடக்கே வெள்ளி எழுந்தால் மழையுண்மையும் , தெற்கே எழுந்தால் மழையின்மையும் அறியப்பட்டது.

இதனைப் பதிற்றுப்பத்து,

"வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி

பயங்கெழு பொழுதோ டாநியம் நிற்ப"

என்று மழை நிகழ்வினை கூறுகிறது (Alis, 2007).

நாழிகை வட்டில் அமைத்து காலத்தை கணக்கிட்டனர். நாழிகை கணக்கிடுவோர் நாழிகை கணக்கர் என்று குறிப்பிடப்படுகின்றனர். சங்க இலக்கியம் இவர்களை 'பொய்யா மாக்கள் ' என்கின்றது.

"பொழுது அளந்தறியும் பொய்யா மாக்கள்

குறுநீர்க் கன்னல் இனைத்தென் றிசைப்ப"

என முல்லைப்பாட்டு பாசறையில் இருந்த அரசன் துயில வேண்டி, நாழிகை கணக்கர் பொழுதை அறிவித்ததை சுட்டுகிறது. விண்மீன் கொண்டு நாட்டு நடப்புகளைக் கணிக்கும் திறனும், காலத்தை கணக்கிடவும், கடலியல் அறிவும் கொண்டு தமிழர்கள் அறிவியல் அறிவு பெற்றிருந்தனர் (Somasundranaar, 2012).

## புறவாழ்வு

சங்க நூல்களுள் புறநானூறும், பதிற்றுப்பத்தும் வீரர்களை பாராட்டுவனவாகும். அகப்பாட்டுக்கள் காதலை பாடுவனவெனிலும், அவற்றினுள்ளும் வீரத்திற்குரிய இடமளிக்கப்பட்டுள்ளது. முல்லைத் திணையிற் பாடப்படும் தலைமகன் செருக்களம் சென்று திரும்பும் வீரனாகவே படைக்கப்பட்டுள்ளான். "ஆண் மக்களைக் குறிக்கும் ஆடவர் என்னும் சொல் இவ்வகையில் ஆழ்ந்து சிந்திக்க தக்கது.

“ஆடு என்னும் சொல்லுக்கு வெற்றி என்பதே

முதற்பொருள்"

மன்னர்கள் தம் போர் வெற்றியை பெரிதாக மதித்துக் கொண்டாடினர். மாற்றாரின் மண்ணைக் கவர்ந்தாலும், அவர் செல்வத்தை கொள்ளையிடலும், அக்காலப் பண்புகளாக விளங்கின (Palaiyan, 2008). எனவே புலவர் பெருமக்கள்

'பிறர் மண் உண்ணும் செம்மல்'

என்றும்,

'கொண்டியுண்டித் தொண்டையோர் மருக'

என்றும் மன்னர்களைப் பாராட்டுவராயினர். போர் அன்றைய உலக வாழ்க்கையில் பெற்றிருந்த பெருஞ்சிறப்பினால் அதற்கேற்ற குறிக்கோளை உருவாக்கி போற்றினர் (Palaiyan, 2008).

## மறவர் குடி மாண்பு

பண்டைய தமிழகத்தில் வழி வழியாக மறவர்களாக விளங்கி மன்னர் குடிக்கு உறுதுணை புரிந்த மறக்குடியினர் வாழ்ந்தனர். இக்குடியினரின் மறப்பண்புகளை பண்டைய சான்றோர் மூதின்முல்லை, ஏறாண்முல்லை, குடிநிலையுரைத்தல், உவகைக் கலுழ்ச்சி முதலான புறத்துறைகளை உருவாக்கி போற்றியுள்ளனர். மறவர் குடியினருக்கும் மன்னருக்கும் இடையே பல தலைமுறைகள் தொடர்ந்து உறவிருந்தது என்பதனை,

"நின்னோடு தொன்று மூத்த உயிரினும் உயிரொடு

நின்று மூத்த விழுத்திணைச் சிறந்த

வாளின் வாழ்நர்" (Manickanaar, 2008)

"நுங்தை தந்தைக்கு இவன்றன் றந்தை

எடுத்தெறி ஞாட்பின் இமையான் றச்சன்

அடுத்தெறி குறட்டின் நின்றுமாய்ந் தனனே"

என்னும் புறநானூற்று பாடல்கள் இத்தலைமுறைத் தொடர்பை விளக்குகின்றன (Balasubramaniyam, 2004).

தம் படை மறவர்கள் வறுமையுறா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை மன்னருக்கு இருந்தது. இதே கருத்தை,

'சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்

இல்லாயின் வெல்லும் படை'

என வள்ளுவரும் வற்புறுத்தி உள்ளார் (Gowmareswari, 2014).

பண்டைய மன்னர்கள் வீரர்கட்கு தன்பால் அன்பு பெருகவும், செயற்கரிய செய்யும் உணர்வினைத் தூண்டவும், குறிப்பிடத்தக்க வீரர்களுக்கு வளமான மருத நிலங்களை பரிசாகக் கொடுத்தலை மரபாகக் கொண்டிருந்தான். மன்னன் மறவருக்கு கவசம் போல விளங்கினான். பண்டைய மன்னர்களின் பெருமை அவர்களின் படையின் பெருமையை பேரளவு சார்ந்திருந்தது.

## கலைகள்

தமிழர்கள் பல கலைகளிலும் சிறப்பு பெற்றிருந்தனர். கட்டிடக்கலை, காவியக்கலை, ஓவியக்கலை, ஒப்பனைக் கலை என பல கலைகளை வகுத்து அதில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதை இலக்கியங்கள் நமக்கு காட்டுகின்றன.

சங்க மக்களிடையே ஒப்பனை உணர்வு மிகுந்திருந்தது. அவர்கள் மலர்களாலும் அணிகலன்களாலும் தங்களை அழகுபடுத்திக் கொண்டனர்.

"கைவளை யாழி தொய்யகம் புனைத்துகில்

மேகலை காஞ்சி"

என்று பரிபாடல் விளக்குகிறது (Manickanaar, 2009).

சங்கமக்கள் உச்சி முதல் உள்ளங்கால் வரை தங்களை அணிகலன்களால் அழகு படுத்திக் கொண்டனர். கூந்தல் அணி, தலையணி, தொய்யகம் போன்ற பலவகை அணிகளால் தங்களை

அலங்கரித்துக் கொண்டது அவர்களின் கலையுணர்வை காட்டுவதோடு அவர்களின் நாகரிக வாழ்க்கையும் எடுத்துக்காட்டுகிறது. வரலாற்றுக்கு அடிப்படை சான்றாகிய கட்டடக்கலையிலும் தமிழர்கள் சிறப்பு பெற்றிருந்தனர்.

## புலவரும் புரவலரும்

புலவர்களை குறிக்கும் சொற்கள் சான்றோர், பரிசிலர் , இரவலர் என்பனவாகும். சால் என்னும் சொல்லுக்கு நிறைவு என்று பொருளாகும். அறிவுடையான் காட்டும் வழியில் செல்ல அன்று மன்னர்கள் தயங்கவில்லை.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவ னாக

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்

புலவர் பாடாது வரைக வென் நிலவரை"

எனத் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினம் மொழிந்துள்ளமை கொண்டு, தன் நாட்டில் புலவர் பலர் வாழ்வதனைத் தனக்கும் தன் ஆட்சிக்கும் உரிய தனிச்சிறப்பாக கொண்டானென உணர முடிகிறது. மன்னர்களின் பொது வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் பங்கேற்று தனிச்சிறப்பு பெற்றிருந்தனர் புலவர்கள் அவர்தம் தனி வாழ்விலும் குடும்ப வாழ்விலும் உரிய பணிகளையாற்றினர் (Avvai Duraisamy pillai, 2010).

மன்னர்கட்கும் புலவர்கட்கும் இடையே வியக்கத்தக்க அளவிற்கு ஆழமான நட்பு நிலவியுள்ளமை அறிய முடிகிறது. கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார், பாரி கபிலர், போன்றவர்கள் நட்பின் மிகச் சிறந்த அடையாளமாக இருந்துள்ளனர். புரவலர்களை மகிழ்விக்க விரும்பிய புலவர்கள் அவர்களின் பண்புகளை புகழ்தலை மட்டுமின்றி அவர்களின் பகைவர்களையும் பழித்துப் பேசினார்கள் (Sanmugam pillai, 1996)..

## பெண்களின் விழுமியங்கள்

தமிழ் நாகரீகத்தின் மிகப் பழமையான சான்றாக திகழ்ந்தது சங்க கால சமுதாயம். அகமென்றும் புறமென்றும் திணையை வகுத்து உணர்வைப் பகுத்து எழுத்திற்கு உருக்கொடுத்து அதன் சிறப்பம்சம். சங்க பெண்ணுக்கு வீடு உலகமாயும், கணவனே உயிராயும் இருந்து வந்துள்ளது. பெண் ஒரு நல்ல மனைவியாய், தாயாய் சங்க சமுதாயத்தில் போற்றப்படுகிறாள்.

"மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே"

இத்தொடரிலேயே ஆண் உணர்வு சிந்தனை பெறப்படுகிறது. தமிழர் சமுதாயத்தில் அச்சமும், நாணமும், மடனும் பெண்களுக்குரிய இயல்புகளாக குறிக்கப்படுகிறது. செல்வம், இளமை, ஆண்டு, குடிமை முதலிய ஒத்த பண்புகளைக் கொண்ட தலைவனும் தலைவியும் எதிர்ப்படுகின்றனர் எனக் களவியல் நூற்பா உரைக்கிறது (Sanmugam pillai, 1996).

## முடிவுரை

தனிமனிதனின் வாழ்வு அவன் வாழும் சமூகத்தை பொறுத்து அமையும். பண்டைய தமிழர்கள் ஆண் பெண் உறவுமுறை பற்றியும், கணவனின் செயல்களைப் போற்றியும் இருந்து வந்துள்ளனர். சமூகத்தின் தலைவனாக மன்னன் நன்னெறி கொண்டவனாக சுற்றத்தோடும், சான்றோர்களோடும் அரசாட்சி செய்து வந்ததை இலக்கியங்கள் கூறுகின்றன. வானியலறிவு கொண்டு நாட்களை கணக்கிட்டனர். போர்த்திரம் மிக்க மறவனை கொண்டு மறவர் குடி மாண்புகளை போற்றி உள்ளனர். கலைகள் பலவற்றைக் கற்று கலையுணர்வோடும், வாழ்வியல் நிலைகளை அறியும் அறிவியல்

அறிஞராகவும், பண்டைய தமிழர்கள் விளங்கினர். தமிழரின் பண்பாடு சங்ககால மக்களின் வாழ்வியல் கூறுகளை மையப்படுத்தி உள்ளதை இக்கட்டுரை விவரிக்கின்றது.

## References


Alis, A. (2007) Pathitrupathu, New Century Book House, Chennai, India.

Avvai Duraisamy pillai, S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Gowmareswari, (2014) Thirukkural Puthiya Urai, Poompuhar Pathippagam, Chennai, India.

Manickam, V.S. (2005 Tamil Kadhal, Meiyappan Pathippagam, Chidambaram, India.

Manickanaar, (2009) Paaripadal Moolamum Uraiyum, Paari Nilaiyam, Chennai, India

Nagarasan, V. (2007) Pathupattu Moolamum Uraiyum, New century book house, Chennai, India.

Narayanasamy Iyer, A. (1952) Natrinai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Palaiyan, A.P., (2008) Purananuru, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (1997) Agananooru, Paari Nilaiyam, Chennai, India.

Ramamurthy, (2013) Maduraikanji, Saratha Pathippagam, Chennai, India.

Ramasubramaniam, V.T. (2005) Periyapuranam, Thirumagal Nilaiyam, Chennai, India.

Sanmugam pillai, M. (1996) Tolkappiyam, Mulai nilaiyam, Chennai, India.

Somasundranaar, P.V. (2012) Mulaipattu Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Viswanathan, A. (2004) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License